செய்தி வெளியீடு எண்: 432 நாள் : 05.09.2015

## பத்திரிகைச் செய்தி

தத்துவ மேதை டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களது பிறந்த நாள் விழா 05.09.2015 சனிக்கிழமை, சென்னை, சேத்துப்பட்டு எம்.சி.சி. மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தமிழக அரசு சார்பாக ஆசிரியர் தின விழாவாகக் கொண்டாடப்பட்டது.

2014 –2015 ஆம் ஆண்டிற்கான டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் விருது வழங்கும் விழாவில் பள்ளிக் கல்வி முதன்மைச் செயலர் திருமதி. த. சபீதா, இ,ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. கே.சி. வீரமணி அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்தி, தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 201 ஆசிரியர்களுக்கும், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 136 ஆசிரியர்களுக்கும், மெட்ரிக் பள்ளிகளில் பணியாற்றும் 30 ஆசிரியர்களுக்கும், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பணியாற்றும் 2 ஆசிரியர்களுக்கும் மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பணியாற்றும் 10 ஆசிரியர்களுக்கும் ஆக மொத்தம் 379 ஆசிரியர்களுக்கு டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன் விருது வழங்கி சிறப்பித்தார்கள்.

இவ்விழாவில் முன்னதாக, பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மேலாண்மை இயக்குநர் திருமதி. மைதிலி கே. இராஜேந்திரன், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. எ. சுந்தரவல்லி, இ.ஆ.ப., அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்ட இயக்குநர் முனைவர் க. அறிவொளி, மெட்ரிக் பள்ளிகள் இயக்குநர் திரு. இரா. பிச்சை, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் முனைவர் வி.சி. இராமேஸ்வரமுருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ரெ. இளங்கோவன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**